பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
09 02 2026 MONDAY 6 30 PM

# வணக்கம் - மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கான திட்டங்கள் இடம்பெறவில்லை என்ற திமுகவின் குற்றச்சாட்டை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார்.

2) தமிழகத்தில் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

3) மாநிலம் முழுவதும் 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கிராமச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

4) ஊராட்சி செயலாளர்களின் நலன்களை பாதுகாக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5) ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று, ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<

மத்திய பட்ஜெட்டில் தமிழகத்திற்கான திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை என்ற திமுகவின் குற்றச்சாட்டு தவறானது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய அவர், அரிய தாதுக்கள் வழித்தடம் தமிழகத்திற்கு அறிவிக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

மாவட்டந்தோறும் மகளிர் விடுதிகள் என்ற திட்டத்தின் கீழ் தமிழகம் பயனடையாதா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மீனவர்கள் நலனுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

தென்னை ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் தமிழக விவசாயிகள் பயனடைய மாட்டார்களா என்றும் அவர் வினவினார்.

இதுபோன்ற பல்வேறு அறிவிப்புகள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்த போதிலும், திமுக உறுப்பினர் திரு. வில்சன் எவ்வித அடிப்படை ஆதாரமும் இன்றி குற்றச்சாட்டை தெரிவிப்பது சரியல்ல என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>>>>>><<<<<<<

தமிழகத்தில் ரயில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இதுதொடர்பாக தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளார்.

*தமிழகத்தின் ரயில்வே திட்டங்களுக்காக வரும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் 7 ஆயிரத்து 611 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*இது மத்தியில் திமுக - காங்கிரஸ் கூட்டணி அரசு ஆட்சி வகித்த போது, செய்யப்பட்ட ஒதுக்கீட்டை விட 11 மடங்கு அதிகமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதற்கு மாநில அரசின் ஒத்துழைப்பு அவசியமாகிறது என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*

*>>>>>>><<<<<<<*

*தமிழகத்தில் நீண்ட காலமாக கட்டப்படாமல் இருந்த ஆயிரத்து 100 தரைப்பாலங்கள், மேம்பாலங்களாக உயர்த்தி கட்டப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு கூறியுள்ளார்.*

*வேலூர் மாவட்டம், பெருமுகை பகுதியில் கட்டப்பட்டு வரும் அரசினர் விடுதி பணிகளை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*மாநிலம் முழுவதும் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 4 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார்.*

*>>>>>>><<<<<<<*

நெல் உற்பத்தியில் இதுவரை இல்லாத அளவு சாதனையை திமுக அரசு செய்துள்ளதாக மாநில அமைச்சர் திரு. கோவி செழியன் கூறியுள்ளார்.

இன்று தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நெல் உற்பத்தியில் தஞ்சை மாவட்டம் சாதனை படைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ஊராட்சி செயலாளர்களின் நலன்களை பாதுகாக்க திமுக அரசு தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முறையான ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஊராட்சி செயலாளர்கள் போராடி வருவதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கோரிக்கைகளை நிறைவேற்றாமல் அவர்களை கைது செய்வது, பணியிட மாற்றம் செய்வது, பணியிடை நீக்கம் செய்வது போன்ற பாசிச நடவடிக்கைகளில் திமுக அரசு ஈடுபடுவது கண்டனத்திற்குரியது என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கிராமசபை கூட்டம் நடத்தப்படாமலும், உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படாமலும் சீரழிந்து வரும் ஊரக நிர்வாகத்தை மேலும் சிதைக்கும் வண்ணம், ஊராட்சி செயலாளர்களின் நலனையும் திமுக அரசு

புறக்கணிப்பது நியாயமா? என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

>>>>>>><<<<<<<

பொதுத்துறை நிறுவனங்களால் அதிக இழப்பை சந்தித்த 3 மாநிலங்களில் தமிழகம் இடம் பெற்றுள்ளதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 16வது நிதி ஆணையத்தின் முதன்மை அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் உள்ள 102 பொதுத்துறை நிறுவனங்களில் 35 நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கி வருவதாக அவர் கூறியுள்ளார்.

மின்சார வாரியத்தின் இழப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரே ஆண்டில் 26 ஆயிரத்து 867 கோடி ரூபாய் அளவிற்கு அரசு மானியம் அளித்தும், 16 ஆயிரத்து 48 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

திமுக அரசின் ஊழல்கள் மற்றும் நிர்வாக சீர்கேடுகள் காரணமாக பொதுத்துறை நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

*தமிழக அரசின் இடைக்கால நிதிநிலை அறிக்கை, சாமானிய மக்களுக்கானதாக இருக்கும் என்று சட்டப்பேரவைத் தலைவர் திரு. அப்பாவு கூறியுள்ளார்.*

*தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக சட்டப்பேரவையில் வரும் 17ஆம் தேதி இடைக்கால நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளதை சுட்டிக்காட்டினார்.*

*கல்வித்துறையின் வளர்ச்சிக்காக தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளதாகவும் திரு. அப்பாவு தெரிவித்தார்.*

*>>>>>>><<<<<<<*

*சேலம் மாவட்டம், கொங்கனாபுரத்தில் கால்நடைத் திருவிழா மற்றும் கண்காட்சி இன்று நடைபெற்றது.*

*இதில் பாரம்பரிய வகைகளைச் சேர்ந்த காளை மாடுகள் மற்றும் சேவல்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 42 செகண்ட்ஸ்)*

*>>>>>>><<<<<<<*

*உதகை அருகேயுள்ள கிராமப் பகுதிகளில் புலிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.*

*இதன் காரணமாக, வனத்துறையினர் புலியின் நடமாட்டத்தை தீவிரமாக கண்காணித்து, மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்*

என்று பழங்குடியினர் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சரவணன் 50 செகண்ட்ஸ்)*

>>>>>>><<<<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரையில் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன் இன்று வழங்கினார்.

>>>>>>><<<<<<<

அரியலூர் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பனிப்பொழிவு அதிகரித்து காணப்படுகிறது.

>>>>>>><<<<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு. பிரசாந்த் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தின் அனைத்து துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளதாக அத்துறைமுக ஆணையத் தலைவர் திரு. சுசாந்த் குமார் ரோஹித் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை வருவாய் அலுவலர் திரு. நாராயணன் இன்று வழங்கினார்.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று, ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவில் Manu Bhaker வெள்ளிப்பதக்கத்தையும், Esha Singh வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>><<<<<<<

உலக பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mandeep Kaur மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

Manama-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 21-1, 21-2 என்ற செட்கணக்கில் கென்யாவின் Elizabeth Nabwire Ouma-வை வென்றார்.

Umesh Vikram Kumar, மனிஷா ராமதாஸ், பிரமோத் பகத், ருத்விக் ரகுபதி, மானஷி ஜோஷி, Nitesh Kumar, Chirag Baretha, துளசிமதி முருகேசன், Hardik Makkar ஆகியோரும் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

சென்னையில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் *Aditya Vishal Balsekar* பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற இரண்டாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர் *7-5, 4-6, 6-1* என்ற செட்கணக்கில் ரஷ்யாவின் *Timofei Derepasko*-வை வென்றார்.

*>>>>>>>END<<<<<<<*